**தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் 2007ம் ஆண்டு பருவ காலத்திற்கு கொப்பரை கொள்முதல் செய்ய அனுமதி வழங்குவது குறித்து விதி 110—ன் கீழ் அறிக்கை**

தமிழகத்தில் தேங்காய் உற்பத்தி அதிகரித்து அதன் காரணமாக தேங்காய் விலை குறைந்துள்ளதால், தேங்காய் உற்பத்தியாளர்களிடமிருந்து அரசு ஆதரவு விலை திட்டத்தின்கீழ் கொள்முதல் செய்ய வேண்டும் என்று கோரிக்கைகள் வந்துள்ளன. கடந்த ஆண்டுகளில் தேங்காய் விலை குறைந்த போது தேங்காய் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு பயனளிக்கும் வகையில் மத்திய அரசு நிர்ணயித்துள்ள ஆதரவு விலையில் NAFED நிறுவனத்திற்கு தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மூலம் கொள்முதல் செய்யப்பட்டது. இந்த ஆண்டு வெளி வியாபாரிகள் ஒரு குவிண்டால் ரூ.3,000/—க்கு கொப்பரை கொள்முதல் செய்வதால் தென்னை விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கவில்லை.

எனவே, தென்னை விவசாயிகளின் உணர்வை புரிந்து கொண்டு 2007ம் ஆண்டு பருவ காலத்திற்கு கொப்பரை கொள்முதல் விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.3,620/— என மத்திய அரசு நிர்ணயித்துள்ளது. இந்த ஆண்டிலும் ஏற்கனவே நடைமுறையிலுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி குவிண்டாலுக்கு ரூ.3,620/— என்ற விலையில் பட்டுக்கோட்டை, பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, பல்லடம் மற்றும் தாராபுரம் ஆகிய மையங்களில் கொப்பரை கொள்முதல் செய்ய தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு அனுமதி வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இதனால் தென்னை விவசாயிகளுக்கு குவிண்டால் ஒன்றுக்கு கூடுதலாக ரூ.620/— கிடைக்கும்.